## 15. ஒரு வழியாக ஓடி வந்தால்

### பல்லவி

ஒரு வழியாக ஓடி வந்தால்
எழு வழியாய் ஓடிபோவனே
கர்த்தரின் வார்த்தை எழுதியுள்ளது
தேவனின் வார்த்தை உறுதியானதே

### சரணங்கள்

1. உமது நாமத்தில் விசுவாசம் வைத்து
உம்மை ஏற்றுகொள்ளும் யாவருக்கும்
உமது பிள்ளையாகும் அதிகாரம் தந்து
உமது நாமத்தை சூட்டுகிறீர்
- ஒரு வழியாக

2. சாத்தானின் வல்லமையை மேற்கொள்ள
இயேசுவின் நாமத்தில் அதிகாரம் தந்தீர்
சர்ப்பத்தை மிதிக்க தேளை நசுக்க
உமது நாமத்தில் வல்லமை தந்தீர்
- ஒரு வழியாக

3. சத்துருவின் மத்தியில் ஒரு பந்தி
எனக்கு ஆயத்தம் படுத்துகிறீர்
அபிஷேக எண்ணெயால் என் தலையை
நிரம்பி வழிய செய்கின்றீர்
- ஒரு வழியாக